# கிருபையுள்ள வார்த்தை ®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22


VOL - 25
ஆண்டு சந்தா ரூ. 100/-

டிசம்பர் DECEMBER
தனிப் பிரதி ரூ. 10/-

2024
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-






ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 8

வாலிபர் பகுதி 10

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**


**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**

நமது
**'கிருபையின் கீதங்கள்'**
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்புகொள்ளவும் : **92443 14431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
**மனந்திரும்புதலை உண்டாக்கும் உண்மையுள்ள வார்த்தை**

YouTube
**@graciouswordcoc**



**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா



# கர்த்தரை கனம்பண்ணுவோம்
## Let us honour God

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், அன்பின் வாழ்த்துக்கள்!

இந்த மாதம் நாம், கர்த்தரை கனம்பண்ணுதலை குறித்து தியானம் செய்வோம். பழைய ஏற்பாட்டிலே கடைசி புத்தகமாகிய மல்கியாவில், கர்த்தர் இஸ்ரவேல் மக்களை பார்த்து, "நான் பிதாவானால் என் கனம் எங்கே?" என கேட்கின்றார். ஆண்டின் இறுதியில் இருக்கின்ற நாம் கேட்டு, கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

ஏனெனில் அவர்கள், பிதாவை மதிப்பதாக எண்ணிக்கொண்டனர். ஆனால் அவர்கள் செயல்களோ அவரை அசட்டைபண்ணுகின்றதாக இருந்தது. இந்த செயலை செய்தவர்கள், கர்த்தருடைய சமூகத்தில் நின்று தூபங்களை காண்பிக்கவும், பலி செலுத்தவும், மக்களுக்காக வேண்டிக் கொள்ளவும், பரிசுத்தப்படுத்தப்பட்ட ஆசாரியர்கள் என குறிப்பிட்டு சுட்டிக் காண்பிக்கின்றார். **மல்கியா 1:6** குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானனையும் கனம் பண்ணுகிறார்களே. நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார். அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள்.

இந்த வசனத்தினை படித்தவுடன், பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் என்றால், இன்றைய நாட்களில் சபையை வழிநடத்தும் மூப்பர்களை, பிரசங்கியார்களை, ஊழியர்களை சொல்கின்றார் என எண்ணிவிட முடியாது. ஏனெனில், புதிய ஏற்பாட்டில் மீட்கபட்ட ஒவ்வொருவரும் ராஜரீகமான ஆசாரியர்களாக இருக்கின்றோம். அன்று ஒரு கோத்திரத்தார் மாத்திரமே ஊழியம் செய்தால் போதும் என்று கட்டளையிட்டவர், இன்றோ மீட்கப்பட்ட ஒவ்வொரும் அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியான (ஊழியம் செய்யும்படியான) கட்டளை கொடுத்திருக்கின்றார் என்பதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். **1 பேதுரு 2:9** நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். ஆகையால் இந்த பாடம், கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினால் மீட்கப்பட்ட, நம் அனைவருக்குமானதாகும்.

கர்த்தரை அசட்டை செய்தல் துன்மார்க்கமாகும் **(சங்கீதம் 10:3)**, ஆகையால், பைபிள் கர்த்தருக்கு பயப்படுகின்றவர்களை நோக்கி, "கர்த்தரை கனம்பண்ணுங்கள்" என்ற அறைகூவல் விடுக்கின்றது **(சங்கீதம் 22:23)**. மேலும், கர்த்தர் தம்மை கனம்பண்ணுகின்றவர்களை கனம் செய்கின்றார். அவரை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனத்தை அடையக்கூடிய அபாயம் இருப்பதினால், இந்த பாடம் மிகவும் அவசியமானதாகும். **1 சாமுவேல் 2:30** ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக. என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். என்னை அசட்டைபண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரை கனம்பண்ணுதல் என்பது வெறுமனே வார்த்தைகளினால் மாத்திரமல்ல, செயல்களினாலும் இருக்க வேண்டும். அதாவது, வாயினால் "கர்த்தருக்கே மகிமை, கர்த்தருக்கே புகழ், அல்லேலூயா, எனக்கு எல்லாமே இயேசுதான்" என சொல்லிட்டு, செயல்களினாலும், இருதயத்தினாலும் அவரை

மகிமைப்படுத்தாதிருப்பதை, ஆண்டவர் இயேசு வன்மையாக கண்டிக்கின்றார். அப்படிபட்ட செயலை “மாய்மாலம்” என்றும், அப்படி செய்கின்றவர்களை மாய்மாலக்காரர்கள் (ஏமாற்றுக்காரர்கள்) என்றும் சாடினார். **மத்தேயு 15:7-9** மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.

நாம், வாயினால் மட்டும் அவருடன் இணைந்து, வாழ்க்கையில் தூரப்பட்டு இருப்பதினை அவர் விரும்பவில்லை. ஆகையால் நாம் உதடுகளினால் மாத்திரமல்ல, உள்ளத்தினாலும், செயல்களினாலும் கனம்பண்ணுவோம். **கொலோசெயர் 3:16,17** கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

வார்த்தையினால் மாத்திரமின்றி வாழ்க்கையினால் கர்த்தரை கனப்படுத்த என்ன செய்ய வேண்டும்? பைபிள் நமக்கு கூறுவது என்ன? என்பதனை நாம் அறிய வேண்டும், ஏனெனில், அதனை அறியாத யூதர்கள் கனத்திற்கு பதிலாக, அவரை அசட்டை செய்தனர் **(ஏசாயா 29:13)**. நாம் அவ்வாறு யூதர்கள் போல செய்யாதிருக்க, கர்த்தருடைய வார்த்தையின் துணைக்கொண்டு நம்மை நாமே தற்பரிசோதனை செய்வோம்.

### 1. பொருளாலும், விளைவின் முதற்பலன்களால் கர்த்தரை கனம்பண்ணுவோம்!

**நீதிமொழிகள் 3:9,10** உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்.

கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள நன்மைகளினால், நாம் அவரை கனப்படுத்துகின்றோமா? நம்முடைய பொருள்கள் (வாகனங்கள், இருப்பிடம் மற்றும் அன்றாடம் பயன்படுத்தும் அவசியமான பொருட்கள் போன்றவை), விளைவின் முதற்பலன் (நமது தொழில், வியாபாரம், வருமானம்) போன்றவற்றால், கர்த்தரை கனப்படுத்தும்படியாக பைபிள் நமக்கு விடும் அறைகூவல் இது.

கர்த்தர் நமக்கு கொடுத்த நன்மைகளாகிய பொருளாலும், முதற்பலன்களாலும், நாம் கர்த்தரை எப்படி கனப்படுத்துவது? அதில் முதல் பங்கை, நாம் சபைக்காகவும், ஊழியங்களுக்காகவும் கொடுக்கும்போது நாம் அவரை கனப்படுத்த முடியும். **யாத்திராகமம் 22:29** முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும் காணிக்கையாகச் செலுத்தத் தாமதிக்கவேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுப்பாயாக. மேலும் முதற்பங்கு என்பது, நமக்கு சம்பாதிப்பதற்கான பெலத்தினை தருகின்ற கர்த்தருடையது **(உபாகமம் 8:16-18)**.


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

ஆகையால், நமது சம்பாத்தியத்தில் முதற்பங்கை ஆண்டவருக்காக (சபைக்காக, ஊழியங்களுக்காக) எடுத்து வைத்து, கொடுக்க வேண்டும் (1கொரி 16:1,2).

அடுத்ததாக, நம்மால் இயன்றதை இல்லாதவர்களுக்கு (திக்கற்றவர்கள், எளியவர்கள், விதவைகள்) கொடுக்கும்போது நாம் அவரை கனப்படுத்துகின்றோம். நீதி. 14:31 தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான். தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான். இந்த செயலை, பரிசுத்த ஆவியானவர், "மாசில்லா சுத்தமான பக்தி" என்கின்றார் (யாக்கோபு 1:27). மேலும் அது "கர்த்தருக்கே கடன்கொடுக்கின்ற செயல்" என்கின்றார் (நீதி. 19:17). எளியவர்க்கு செய்கின்றவைகள் அனைத்தும், தனக்கே செய்யப்பட்டதாக ஆண்டவர் இயேசு கூறினார் (மத்தேயு 25:40). ஆயினும் அவைகள் அனைத்தும் தற்பெருமைக்காக செய்யப்படாமல் (மத்தேயு 6:1-4), தாழ்மையோடு, நன்றியுணர்வினாலே அன்புடன் மகிழ்ச்சியாக செய்யப்பட வேண்டும் (பிலேமோன் 7, 1கொரி 13:1-10, எபிரெயர் 13:16). மேலும், அவைகள் சபையின் மூலமாய் செய்யப்பட வேண்டும் (எபேசியர் 3:21).

நாம் ஊழியங்களுக்காக, சபைக்காக, திக்கற்ற விசுவாசிகளுக்காக, நமது குடும்பத்திற்காக பயன்படுத்துவது எல்லாம் நல்ல செயலே. நாம் கர்த்தர் சொன்னபடி நல்ல வழிகளில் செலவழிக்கும்போது மற்றும் பயன்படுத்தும்போது, நாம் கர்த்தரை கனம் செய்கின்றோம். அதுபோல நேர்மையான வழியில் சம்பாதிக்கும் போதும் நாம் அவரை கனப்படுத்துகின்றோம்.

## 2. மனந்திரும்பி, அதில் நிலைத்திருத்தலினால் கர்த்தரை கனம் பண்ணுவோம்!

ரோமர் 2:4 அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?

அடுத்ததாக, நாம் கர்த்தருடைய வார்த்தையை கேட்டு, உடனே மனந்திரும்பும் போதும், மற்றும் அந்த மனந்திரும்புதலில் நிலை நிற்கும்போதும் நாம் பிதாவை கனம்பண்ணுகின்றோம். வசனத்தினை கேட்டும் மனந்திரும்பாதவர்கள் கர்த்தரை அசட்டை செய்கின்றனர் என ஆவியானவர் ரோமாபுரி சபையாருக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

வசனம் படிக்கின்ற, கேட்கின்ற ஒவ்வொரு முறையும் "ஆவியானவர் என்னிடம் தான் பேசுகின்றார்" என்ற உணர்வு வேண்டும். மேலும், ஒவ்வொரு பிரசங்கத்தினையும் நான், எனக்காக தான் கேட்க வேண்டும். ஏனெனில், நான் திருந்தும்படியாக, அதாவது விட்டுவிட வேண்டிய துர்க்குணங்களை, பழக்கங்களை விட்டுவிடும்படியாகவும், கடைபிடிக்க வேண்டிய நல்ல பழக்கங்களை, குணங்களை என்னில் சேர்க்கும்படியாகவும் தான், ஆவியானவர் என்னிடம் பேசுகின்றார் என்ற விசுவாசம் வேண்டும்.

இப்படிபட்ட விசுவாசம் இல்லாதபடியினால், இஸ்ரவேல் மக்கள் கடைசிவரை திருந்தவும் இல்லை. கானானுக்குள் பிரவேசிக்கவும் இல்லை. எபிரெயர் 4:1,2 ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போல நமக்கும் அறிவிக்கப்பட்டது, கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.

நாம் நமது இருதயத்தினை கடினப்படுத்தி விடக்கூடாது. நாம் வசனத்தினை மற்றவர்களுக்காக கேக்கும்போது நம் இருதயம் கடினப்படும். வசனம் நம் பாவத்தினை உணர்த்தும் போது, "யார் தான் யோக்கியன்; நான் செய்கின்றது ஒன்றும் பெரிய பாவமில்லை" என கடிந்துக்கொள்ளுதலை உதாசினம் செய்யும்போதும், நம் இருதயம் கடினப்படும். இருதயக்கடினம் என்றும் ஆபத்தானதாக

இருக்கின்றது. நீதிமொழிகள் 29:1 அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்.

ஆண்டவர் இயேசு அதனால் தான் "கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்"என்று சொன்னார். ஆகையால், வசனத்தின் மூலம் ஆவியானவர் நம்மோடு பேசும்போது, இஸ்ரவேலர்களைப்போல நடந்துக்கொள்ள வேண்டாம். எபிரெயர் 3:7, ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.

மாறாக, ஆவியானவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து, உடனே மனந்திரும்பி, அதற்கேற்ற கனிகளை (செயல்களை, சிந்தனைகளை, பேச்சுக்களை) கொடுப்போம் (மத்தேயு 3:8). இன்று ஆவியானவர், கிறஸ்துவின் உபதேசத்தினை, கிறிஸ்துவின் ஊழியர்கள் வழியாக தான், நம்மிடம் பேசுவார் என்பதனை கருத்தில் கொள்வோம் (லூக்கா 10:16). ஆயினும் கிறிஸ்துவின் மாசற்ற பரிசுத்த போதனையோடு, எதனையும் கூட்டி, குறைத்து சொல்லும் ஊழியர்களை புறக்கணிப்போம் (2யோவான் 7-11).

ஏனெனில், சிலர் தங்கள் சுய லாபங்களுக்காக கிறிஸ்துவின் போதனையோடு, மோசேயின் போதனையையும் இணைத்து மக்களிடம் போதிக்கின்றனர். இந்த செயல்கள் சபை ஆரம்பித்த முதலாம் நூற்றாண்டிலேயே பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட அப்போஸ்தலர்களால் கண்டிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 15:1-28). அப்படி செய்வோர், "அதுவும் தேவன் கொடுத்த கட்டளை தானே" என்று சொல்கின்றனர். உண்மை தான், கர்த்தர் கொடுத்தது தான். நாம் அதனை தெரிந்துக்கொள்வதில் எந்த தவறும் இல்லை. மாறாக, நாம் கடைபிடிக்க வேண்டியது கிறிஸ்துவின் போதனை மட்டும்தான் என்பதனை பைபிள் தெளிவாக கூறுகின்றது (எபிரெயர் 1:1-3; 2 யோவான் 7-11).

மேலும், நாம் அனைவரும் கிறிஸ்துவின் போதனையின்படி நடந்தோமா? இல்லையா? என்று தான் நியாயத்தீர்ப்பிலே கணக்கு கொடுக்க வேண்டும். மோசேயின் போதனையின்படி அல்ல. அதனை ஆண்டவர் இயேசுகிறிஸ்துவே உறுதியாக கூறியுள்ளார் (யோவான் 12:48; யாக். 1:25). மேலும் மோசேயின் போதனையை கடைபிக்க நாம் ஒன்றும் மோசேயின் சீடர்களாகிய யூதர்கள் அல்ல, கிறிஸ்துவின் சீடர்களாகிய கிறிஸ்தவர்கள் என்பதனை மனதில்கொள்வோம் (அப். 11:26). பழையதையும் புதியதையும் ஒன்றாக இணைக்க வேண்டாம் (மத்தேயு 9:16,17). அப்படி இணைத்து போதிப்பவர்களிடம் இணைந்திருக்கவும் வேண்டாம் (2யோவான் 7-11). பரிசுத்த ஆவியானவரே சுயமாய் பேசமால், கிறிஸ்து போதித்ததை மாத்திரம் நினைவுப்படுத்தி (யோவான் 16:13-15), நம்மை கிறிஸ்துவிற்கு நேரகாக மனந்திரும்புலுக்குள் வழிநடத்துகின்றார் (யோவான் 16:7-11). ஆகையால் அதில் நிலைத்திருப்போம்.

### 3. உற்சாகமாய் நற்செய்தி அறிவிப்பதினால் கர்த்தரை கனம்பண்ணுவோம்!

யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

அடுத்ததாக, நாம் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் போது, பிதாவானவரை கனப்படுத்துகின்றோம். கிறிஸ்து தம்மை பின்பற்றுகின்றவர்களுக்கு பிரதானமாக (மிக மிக முக்கியமாக) கொடுத்த கட்டளை, அவருடைய நற்செய்தியை. நானிலமெங்கும் அறிவிப்பதாகும் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15,16). கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிப்பது என்பது யாரோ ஒரு சிலருக்கு ஒதுக்கப்பட்ட ஊழியம் அல்ல. மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய தலையாய இறைபணியாகும் (1பேதுரு 2:9). மேலும், நாம்

அனைவரும் செலுத்தி தீர்க்க வேண்டிய கடன் அது! (ரோமர் 1:14). உற்சாகமாய் செய்யும்படியாக நம் மீது விழுந்த கடமை அது (1கொரிந்தியர் 9:16). செய்யாதிருந்தால் பேராபத்தினை சந்திக்க வேண்டி இருக்கும். ஆகையால் பொறுப்புகளை புறக்கணிக்கா திருப்போம். 1கொரிந்தியர் 9:16,17 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு. உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.

நம்மில் அநேகர், அறிவிக்க வேண்டிய நற்செய்தி என்னவென்று அறியாதிருக்கின்றோம். அதனை பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதில் தீவிரம் கொண்ட அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக கொரிந்தியர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை பற்றியதாகும்; 1கொரிந்தியர் 15:1-5 அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.

கிறிஸ்து நம்மை நினைவுகூற சொன்னது, நமக்காக பிக்கப்பட்ட அவரது சரீரத்தினையும், நமக்காக சிந்தப்பட்ட அவரது இரத்தத்தினையும் தான். அதாவது அவருடைய மரணத்தை (அவர் நமக்காக மரித்ததை) நினைவுக்கூறச் சொன்னார். அதனை நாம் வாரத்தின் முதல் நாள்தோறும் நினைவுகூர்ந்து, பரிசுத்த பந்தியிலே கையிட வேண்டும் என்பதே அவரது கட்டளை (மத். 26:26-28; 1கொரி. 11:24-28). அவ்வாறு நாம் செய்யும்போது, புதிதாக கர்த்தர் அண்டை வருகின்றவர்களுக்கு, அவர் நமக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்த நற்செய்தியை அறிவிக்கின்றோம். 1கொரிந்தியர் 11:26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

பிரியமானவர்களே, நாம் ஆண்டின் இறுதி நாட்களில் இருக்கின்றோம். நாம் நேசிக்கின்ற பிதாவை நாம் கனம் செய்கின்றோமா? நம்மை அறியாமலே கனவீனப்படுத்துகின்றோமா? என்பதனை, நின்று நிதானித்து, நம்மை நாமே பரிசோதித்து, நம் இருதயத்தினையும், அதின் சிந்தனைகளையும், நம் சரீரத்தினையும் அதின் வார்த்தை மற்றும் செயல்களையும் கர்த்தருக்கு உகந்ததாக மாற்றி, நம்மை நாமே உருமாற்றி, அவருக்காக நம்மையும், அவர் நமக்கு கொடுத்தவைகளையும் பரிசுத்த பலியாக அர்ப்பணிப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவராக!

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. இயேசுவை பார்க்க வந்த சாஸ்திரிகளுக்கு வழிகாட்டினது எது?
2. எரேமியாவின் ஊர் மற்றும் தகப்பன் பெயர் என்ன?
3. ஏரோது ராஜாவிடம் சாஸ்திரிகள் கேட்ட கேள்வி என்ன?
4. யோனாவை தேவன் எந்த பட்டணத்திற்கு போகச் சொன்னார்?
5. எரேமியா எந்த வருடத்திலே தீர்க்கதரிச ஊழியத்திலே ஆரம்பித்தார்?

# நல்ல பங்கை தெரிந்துகொள்வோம்! வாரீர்!!

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பிரியமானவர்களே இந்த மாதம், நாம், "நல்ல பங்கை தெரிந்து கொள்வோம்" என்ற தலைப்பின் கீழாக வேதத்திலிருந்து சில காரியங்களைக் கற்றுக் கொள்வோம்.

வேதாகமத்திலே அநேக பெண்கள் கடவுளுக்கு பிரியமான காரியத்தை தங்கள் வாழ்வில் தெரிந்து கொண்டார்கள். ஆனால், சில பெண்கள் கடவுளுக்கு பிரியம் இல்லாத காரியங்களையும் செய்தார்கள். கடவுளுக்கு பிரியமானதை தெரிந்து கொண்டவர்களுக்கு என்ன நடந்தது என்றும், பிரியம் இல்லாததை தெரிந்து கொண்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் குறித்தும் நாம் பார்க்கலாம்.


**எஸ்தர்:** தன் வளர்ப்பு தகப்பன் சொல்லைக்கேட்டு அதற்கேற்றபடி தேவப் பிள்ளைகளுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவள். இவள் தனக்குக் கிடைத்த அரண்மனை வாழ்க்கையை மேன்மை என்று எண்ணாமல் மாறாக, "நான் எதற்காக இந்த இடத்தில் நியமிக்கப்பட்டேன்" என்பதை நினைவு கூர்ந்து, தேவனுடைய பிள்ளைகளுக்காக தன் உயிரையும் பொருட்படுத்தாது செயல்பட்டவள் (எஸ்தர் 2:17 ,20; எஸ்தர் 8 :5 ,6 ,8 ,16)

**ராகாப் :** இவள் ஒரு தளர்வான பெண். ஆனாலும் இஸ்ரவேலின் தேவனைக் குறித்து கேள்விப்பட்டதினாலே தேவனுடைய பிள்ளைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவளாக இருந்தாள். எனவே, அவர்களை காப்பாற்றி அனுப்பி வைத்தாள் தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது செயல்பட்டவள் ராகாப் (யோசுவா 2 :10 ,11 ,15 ,21).

**ஏவாள்:** தேவனுடைய கைகளில் படைக்கப்பட்ட மாபெரும் படைப்பாக இருப்பினும், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற நிலை வந்தபோது சரியான தேர்வு செய்யாமல் தவறவிட்ட பெண் இவள். அதனால் தெரிந்து கொள்வதில் நாம், தேவ சித்தம் தேவதிட்டம் தேவ கட்டளைகள் ஆகிய இவைகளை சரியாக பின்பற்றுகிறோமா என்று சிந்தித்து கவனமாக தெரிந்தெடுக்க வேண்டும் (ஆதியாகமம் 2 :20 – 2; 3:13, 16).

**சாராள்:** தேவன் தங்களுக்கு என்று கொடுத்த

## அறிந்து கொள்வோம் — மாதம் ஒரு "பூ" அல்லி



அல்லி அல்லது ஆம்பல் என்பது (சங்க காலத்தில் ஆம்பல்) நீரில் வளரும் ஒரு கொடியும் அதில் பூக்கும் மலரின் பெயரும் ஆகும். இக்கொடியை குளம், பொய்கை, நீர்ச்சுனைகளிலும், மெதுவாக ஓடும் ஆறுகளிலும் பார்க்கலாம். அல்லி இனத்தில் சுமார் 50 வகையான கொடிகள் உள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் சங்க காலத்து இலக்கியங்களில் ஆம்பல் மலரைப்பற்றி பல குறிப்புகள் உள்ளன.

அல்லி இரவில் மலர்ந்து காலையில் குவியும் (இதழ்கள் மூடும்). தாமரை காலையில் மலர்ந்து இரவில் குவியும். எகிப்தில் உள்ள நைல் ஆற்றில் பூக்கும் நீல நிற அல்லி இரவில் மலர்ந்து காலையில் குவியும் என்றாலும், அதே ஆற்றில் பூக்கும் வெண்ணிற அல்லி காலையில் மலர்ந்து இரவில் குவியும்.

மாபெரும் ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தத்தையும் மறந்து, தேவனுடைய திட்டம் நிறைவேற தங்களை தேவன் தெரிந்தெடுத்து இருக்கிறார் என்று நன்கு அறிந்தும் கூட, தன் சித்தத்தை (தன் ஆசையை) நிறைவேற்ற தானாகவே தவறான முடிவெடுத்து அதில் தோல்வியை சுமந்தாள். அதனால் வந்த விளைவுகளும் அவளை பாதித்தது (ஆதியாகமம் 12:2; 16 :2 -5; 18:10-14).

**மரியாள் :** "சரியான தேர்ந்தெடுத்தல், தெரிந்துக்கொள்ளுதல்" என்ற இந்த தலைப்பை தேர்ந்தெடுக்க காரணமாக இருந்த ஒரு பெண் இவள். இயேசுவின் பாதம் அருகே அமர்ந்து, அவர் பேசின வார்த்தைகளைக் கேட்டு ஆசையாக அவர் அருகில் அமர்ந்திருந்ததாள். நல்ல பங்கை தெரிந்து கொண்ட பெண் என்று புகழப்பட்டவள் (லூக்கா 10: 39-42),

ஆம் பிரியமானவர்களே, அநேக நேரத்தில் நாமும் கூட கடவுளுக்கு பிரியமானது என்னது என்பதை நன்றாக அறிந்து வசனத்தின் மூலமாக தெளிவாக தெரிந்து கொண்டு, சரியான தீர்வுகளை நம் வாழ்விலே எடுப்போம். சில நேரங்களில் மட்டுமல்ல பல நேரங்களில் நம்முடைய தேர்வுகள், தீர்மானங்கள் நம்முடைய வாழ்க்கையின் முடிவுகளாக அமைந்து விடுகின்றன

இவர்கள் எல்லோருமே தங்கள் வாழ்வில் உலகமா? அல்லது தங்களுடைய சுய வாழ்க்கையா? அல்லது தேவனுடைய திட்டமா? என்று வந்தபோது, தேவனுடைய வார்த்தைக்கு கட்டுப்பட்டு தேவனுடைய திட்டம் நிறைவேற தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். அப்படி சரியான தேர்வு செய்ய முடியாமல் தவறிப்போன பெண்களும் கூட, தேவனுடைய மன்னிப்பை, இரக்கத்தைப் பெற்று, மறுவாழ்வு பெற்று ஆசீர்வாதத்தை தங்கள் வாழ்வில் பெற்றுக் கொண்டார்கள். நாமும் நம் தினசரி தேவ சித்தமா? நம் சுயமா? என்று வரும்போது, தேர்வு செய்யும் நிலை வரும்போது நல்ல பங்கை தெரிந்துகொள்வோம்!

– சகோதரி. **பெவர்லி விடியா**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am

**Heaven TV:** Thursday, Friday, Saturday, 6:30-7:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# 10 தொழுநோயாளிகளிடமிருந்து 10 பாடங்கள்

எனக்கு மிகவும் அன்பான வாலிப தம்பி, தங்கைகளுக்கு, எல்லாம் வல்ல ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் உங்களிடம், ஆண்டவர் இயேசுவை சந்தித்த பத்து தொழுநோயளிகளிடமிருந்து, நம் வாழ்விற்கு அவசியமான பத்துப் பாடங்களை உங்களுடன் பகிர்வதில் மிகவும் அகமகிழ்கின்றேன்.

கிறிஸ்துவின் வாழ்வினை பற்றிய, வரலாற்றினை ஆய்வு செய்தவர்களுள் ஒருவராகிய மருத்துவர் லூக்கா, பதிவு செய்த இந்த நிகழ்வு, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற ஒரு வரலாற்று பதிவாகும் (லூக்கா 17:11-20). அக்காலங்களில் தொழுநோயாளிகள் ஊருக்கு புறம்பாக்கப்பட்டு, பட்டணத்திற்கு வெளியே தங்குவார்கள் (2 இராஜாக்கள் 7:3-11). அது தொற்றுநோய் என்பதினால், ஊருக்குள் வர அவர்களுக்கு அனுமதியில்லை. யூதர்களுக்கு அது சட்டமாகவும் இருந்தது (லேவியராகமம் 13:1-14:57).

### 1. ஒற்றுமை (லூக்கா 17:12):

அவர்கள் பத்துபேரும் ஒன்றாக இருக்கின்றனர், ஒன்றாகவே ஆண்டவரிடம் வருகின்றனர். இன்றைய நாட்களில் ஒரே வீட்டில் எல்லாரும் தனித்தனியே இருக்கின்ற அவலமான நிலை இருக்கின்றதை நாம் சில வீடுகளில் பார்க்க முடியும். அவ்வாறு ஒன்றாக இருக்காமல் இருப்பதற்கு, அவர்கள் ஒவ்வொருவரிடமும் நியாயமான காரணங்கள் இருக்கலாம். நியாயமான காரணங்களை சொல்லி விலகி இருப்பதினைவிட, நியாயாதிபதியாகிய கர்த்தரைக் காரணம் சொல்லி, ஒன்றாக இருப்பதே சிறந்ததாகும் (1கொரிந்தியர் 1:10, பிலிப்பியர் 2:1-5). “ஒற்றுமையே வலிமை மற்றும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்பவை எல்லாம், நாம் சிறு வயதில் இருந்தே படித்த பாடங்கள். அதனை பயிற்சி செய்வோம். முப்புரி நூல் சீக்கிரம் அறாது (பிரசங்கி 4:9-12).

### 2. கர்த்தரை தேடுதல் (லூக்கா 17:12):

அடுத்தாக, அவர்கள் பத்துபேரும், ஆண்டவரைத் தேட வருகின்றனர். ஆபத்து நாட்களில் நாம் ஆண்டவரைத் தேட வேண்டும் (சங்கீதம் 91:15, 50:15). அவர் நம்மை இரட்சிப்பார் (சங்கீதம் 107:6,13,19,28). கருத்தாக தேடின சகேயுவின் வீட்டிற்கு கர்த்தர் சென்றார் (லூக்கா 19:1-10). நாம் நித்தமும் அவரை தேடுவோம் (சங்கீதம் 105:4).

### 3. தாழ்மை (லூக்கா 17:12):

அடுத்தாக, அவர்கள் பத்துபேரும், தூரத்திலே நின்றனர் என்று படிக்கும்போது, அவர்களது தாழ்மையினை நாம் அறிய முடிகின்றது. அவர்கள் தங்களை ஆண்டவரின் அருகில் வர தகுதியற்றவர்கள் என நம்பினர் மற்றும் அதனை செயல்படுத்தினர். தொழுநோயாளிகள் என்பதினால் அருகில் வரவில்லை என நாம் எண்ண முடியாது. ஏனெனில், ஒரு தொழுநோயாளியை ஆண்டவர் தொட்டு சுகமாக்கினதை நாம் இன்னொரு நிகழ்வில் படிக்கின்றோம் (மத்தேயு 8:1-4). தாழ்மை என்பது “உயர்வின் வழி, ஆண்டவர் நம்மை உயர்த்தும் வழி” (யாக்கோபு 4:6,10).

### 4. கர்த்தரை பற்றிய அறிவு (லூக்கா 17:13):

அடுத்தாக, அவர்கள் பத்துபேரும், ஆண்டவர் இயேவை ஐயரே (குருவே), என்று அழைக்கின்றனர். அது அவர்களுக்கு உண்டான ஆண்டவரை பற்றிய அறிவை வெளிப்படுத்துகின்றது. கடவுள் யாரென்று நமக்கு தெரியுமா? அவரை நாம் யாராக அறிந்திருக்கின்றோம்? பிதாவே கடவுளென்றும், கிறிஸ்துவே அவருடைய குமாரென்றும் (யோவான் 17:1-3) அறிவதே நித்திய ஜீவன். அவரை அறிகின்ற அறிவிலே வளர வேண்டும் (2பேதுரு 3:18) என பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது.

( தொடரும்....)

சிறுவர் பகுதி

# சாஸ்திரிகள்



ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். யூதேயா என்ற நாட்டை ஏரோதுராஜா ஆட்சி செய்து வந்தார். அவருடைய நாட்களில் அந்த நாட்டிலுள்ள பெத்லகேம் என்ற ஊரில்தான் இயேசு பிறந்தார். அந்த நேரத்தில் என்ன நடந்தது தெரியுமா? கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்.

இதை கேள்விப்பட்ட ஏரோது ராஜாவும் எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கி அந்த பட்டணத்திலுள்ள பிரதான ஆசாரியர், வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச் செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார் என்று விசாரித்தான். அதற்கு அவர்கள்: தீர்க்கதரிசியினால் அவர் யூதேயாவிலுள்ள பெத்தலகேமில் பிறப்பார் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

அப்பொழுது ஏரோது ராஜா கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளை அழைத்து, நட்சத்திரத்தைக் குறித்து விசாரித்து; நீங்கள் போய் பிள்ளையை குறித்து உறுதியாய் விசாரித்து, அதை கண்ட பின்பு, நானும் வந்து அதை பணிந்து கொள்ளும்படிக்கு எனக்கும் தெரியப்படுத்துங்கள் என்று சொல்லி அவர்களை அனுப்பினான்.

அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த இடம் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்கள் அதைக் கண்டு மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். அவர்கள் நட்சத்திரம் நின்ற வீட்டுக்குள் சென்று பிள்ளையையும், அதன் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதை பணிந்துப் கொண்டு, தங்களுடைய பொக்கிஷங்களை திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்கு காணிக்கையாக வைத்தார்கள்.

மேலும், அவர்கள் ஏரோது ராஜாவினிடத்திற்கு திரும்பிப்போக வேண்டாம் என்று சொப்பனத்தில் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாய் தங்கள் தேசத்திற்கு போனார்கள்.

ஆகவே குட்டீஸ், இன்றைக்கு படித்ததைப்போல நாமும் தேவனைக் கனப்படுத்தவும், தேவ எச்சரிப்பு வரும்போது அதைக் கேட்டு இந்த சாஸ்திரிகள் போல உடனே கீழ்ப்படியவும் வேண்டும். அதைத்தான் தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார். நீங்களும் அதின்படி செய்வீர்களா? அடுத்த மாதம் சந்திப்போம்!

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 3:6** "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."

– சகோதரி. குயினி கமல கிருபா

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | J. நவீன் பீட்டர் | – | மதுரை |
| 2. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – | மதுரை |
| 3. | S. ஜூடா லியோ | – | ரஸ்தா |
| 4. | G. ஜெர்லின் | – | ரஸ்தா |
| 5. | M. அபி சூர்யா | – | எழுகம்வலசு |
| 6. | A. ஹானா ஜோதிராணி | – | மதுரை |
| 7. | A. சுபிக்ஷா | – | பெருமாள் வலசு |
| 8. | A. சாம்குமார் | – | பெருமாள் வலசு |
| 9. | M. ஜோனத்தான் | – | கரூர் |
| 10. | V. ஏஞ்சல் ஜோயன்னா | – | மதுரை |
| 11. | A. அரவிந்த் | – | மதுரை |
| 12. | P.M.K. சனா | – | மதுரை |
| 13. | M. சஞ்சய் | – | மதுரை |
| 14. | D. டேஃனி | – | சென்னை |
| 15. | D. ஜீனித்தா | – | சென்னை |
| 16. | P. பாண்டியன் | – | வேலூர் |

சிறுவர் பகுதி

# யோனா



கடவுளின் செல்லப்பிள்ளைகளா! நீங்கள் எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்?

11 மாதம் சென்றுவிட்டது, புது வருடத்திற்காக காத்திருக்கிறீர்களா? புது வருடம் உங்களுக்கு சந்தோஷமாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்க உங்களுக்காக கடவுளை வேண்டிக்கொள்கிறேன்.

இப்ப கூட, யோனா என்கிற நபரைப் பற்றி கற்றுக்கொள்ளலாமா?

பைபிளில், யோனா என்ற ஒருவர் இருந்தார் என்று கூறுகின்றது. அவரை கடவுள் அழைத்து, "நீ போய் நினிவே என்ற பட்டணத்தில் உள்ள மக்களிடம் நான் சொல்லும் வார்த்தைகளை சொல்லு" என்று சொன்னார். ஆனால் யோனா என்ன செய்தார் தெரியுமா? "அந்த மக்கள் கேட்டமாட்டாங்க, கீழ்படியமாட்டாங்க" என்று காரணம் சொல்லி, நினிவேக்கு போவதற்கு பதிலாக தர்ஷிசுக்கு போகும் கப்பலில் ஏறினார்.

என்ன நடந்தது தெரியுமா? அந்த கப்பலில் உள்ள அனைவருக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டது. உடனே, "இந்த ஆபத்து யாரால்" என்று விசாரிக்கும்போது யோனாவால் என்று தெரியவந்தது. உடனே யோனாவை கடலில் தூக்கிபோட்டார்கள்.

அடுத்து என்ன நடந்தது தெரியுமா? யோனாவை ஒரு பெரிய மீன் விழுங்கியது. யோனா என்பவர் மீனின் வயிற்றில் மூன்று நாள் இருந்தார். அந்த மீன் யோனாவை கரையிலே கக்கியது, யோனா எழுந்து போய் ஆண்டவர் வார்த்தையின்படி

பொதுவான செய்திகள்

## விஸ்வகர்மா திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தாது

### - மத்திய அரசிடம் முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்

**சென்னை:** மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும். எனவே, தற்போதைய வடிவில் அதனை செயல்படுத்திட இயலாது. சமூக நீதி அடிப்படையில், தமிழகத்திலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்று கூறி, மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (நவ.27) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் 4-1-2024 நாளன்று இந்தியப் பிரதமருக்கு தான் எழுதியிருந்த கடிதத்தை முதல்வர் ஸ்டாலின் நினைவுகூர்ந்துள்ளார்.

ஒன்றிய அரசின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்திட தமிழக அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு விரிவான ஆய்வினை மேற்கொண்டு, இத்திட்டத்தில் கீழ்க்காணும் மாற்றங்களைச் செய்திடப் பரிந்துரைத்துள்ளது. அவற்றை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாக முதல்வர் தெரிவித்துள்ளார்.

நன்றி! இந்து தமிழ் நாளிதழ்

நினிவேக்குப்போய் கடவுள் வார்த்தையை சொன்னார். அனைவரும் மனந்திரும்பினார்கள், கடவுளின் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார்கள்.

கடவுளுடைய செல்லங்களா! நீங்களும் கடவுள் சொல்வதை மாத்திரம் அல்ல, உங்க அம்மா, அப்பா, பள்ளிகூட ஆசிரியர், உங்க ஊழியர் ஆகிய இவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்பதான் கடவுள் உங்களையும் ஆசீர்வதித்து உயர்த்துவார். ஒரு நல்ல தீர்மானம் எடுப்பீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனப்பாட வசனம் : சங்கீதம் 18:44** "அவர்கள் என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்..."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

சிறுவர் பகுதி

# ஏரோது ராஜா



ஹாய் செல்லகுட்டீஸ்! உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஸ்தோத்திரங்கள் மற்றும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் வேதாகமத்திலிருந்து ஒரு அருமையான காரியத்தைக் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்து யார் என்று தெரியும் அல்லவா? நல்லது. ரோமானியர்களால் நியமிக்கப்பட்ட ஒரு கொடுமையான அரசர் தான் ஏரோது. தன்னுடைய ராஜா பதவியை யாருக்காகவும், எதுக்காகவும் விட்டுக் கொடுக்காத கொடூரமான ராஜா தான் இந்த ஏரோது.

இந்த ஏரோது ராஜா அரசாட்சி காலத்தில் தான் இயேசு பிறக்கிறார். அதாவது மூன்று சாஸ்திரிகள் வந்து யூத ராஜா எங்கே? என்று ஏரோதுவிடம் கேட்டனர். அப்பொழுது ஏரோது நான் தான் ராஜா என்று சொல்ல, சாஸ்திரிகள் இல்லை, யூதா தேசத்திற்கு ராஜா இப்பொழுது பிறந்திருக்கிறார். கிழக்கிலிருந்து அவருடைய நட்சத்திரத்தைத் தொடர்ந்து வருகிறோம் என்றார்கள்.

இதைக் கேட்ட ஏரோது ராஜா மிகவும் கோபம் கொண்டு, நீங்கள் போய் அவரை பாருங்கள். பிறகு நானும் வந்து பார்க்கிறேன் என்றான். சாஸ்திரிகள் இயேசுவை பார்த்துவிட்டு வேறு வழியாய் அவர்களுடைய ஊருக்குச் சென்றனர்.

இந்த செய்தியை கேள்விப்பட்ட ஏரோது ராஜா, சாஸ்திரிகள் செய்ததைக் கேள்விப்பட்டு, கோபம் கொண்டு, ஊரிலுள்ள இரண்டு வயதிற்குட்பட்ட அனைத்து ஆண் பிள்ளைகளையும் கொல்ல கட்டளையிட்டான்.

இந்த தகவலை தேவதூதன் யோசேப்புக்கு தெரிவித்து, பெத்தலகேமை விட்டு, நீயும் உன்னுடன் மரியாளையும், குழந்தை இயேசுவையும் கூட்டிக்கொண்டு போய்விடவும் எச்சரிக்கை செய்தனர். பின்பு மூன்று பேரும் பெத்லகேமிலிருந்து போய்விட்டனர். இயேசு இவ்வாறாக காப்பாற்றப்பட்டார். ஆனால் ஊரில் இருந்த இரண்டு வயதிற்குட்பட்ட அனைத்து ஆண் பிள்ளைகளையும் ராஜா கொன்று குவித்தான்.

என்ன செல்லங்களா! சம்பவம் புரிந்ததா? எந்த சூழ்நிலையிலும் பிரச்சனைகளும், போராட்டங்களும் வந்தாலும் நாம் கடவுள் நம்மை எப்பொழுதுமே கைவிடமாட்டார். அதைப்போல நாமும் இந்த ஏரோது ராஜாவைப்போல பிறருக்கு துன்பம் செய்யக்கூடாது. சரியா? மீண்டும் அடுத்த சம்பவத்தில் சந்திக்கலாம்.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 34:19** "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லா வற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்."

– சகோதரி. ஏஞ்சலின் கமலம்

சிறுவர் பகுதி

# எரேமியா

ஹாய் குட்டீஸ்! எப்படியிருக்கிறீர்கள். கர்த்தரின் கிருபையினால் நலமுடனும், சுகமுடனும் இருப்பீர்களென்று நம்புகிறேன். உங்களுக்காக தேவனிடத்தில் விண்ணப்பிக்கிறேன்.

குட்டீஸ், இந்த மாதம் நாம் எரேமியா தீர்க்கதரிசியைப் பற்றி பார்க்கவிருக்கிறோம். இவருடைய தகப்பன் பெயர் இல்க்கியா. ஆசாரியனின் மகனாகிய எரேமியா ஆனதோத் கிராமத்தில் பிறந்து வளர்க்கப்பட்டார். இந்த கிராமம் எருசலேமின் வடகிழக்கு பகுதியில் நான்கு மைல் தூரத்தில் இருந்தது. எரேமியா தெற்கு சாம்ராஜ்யமான யூதா தேசத்தின் சரித்திரத்தில் இறுதி நாற்பது ஆண்டுகளாகிய கி.மு. 626 முதல் 586 வரை தீர்க்கத்தரிசன ஊழியம் செய்தார்.

எருசலேமையும் அதின் தேவாலயத்தையும் அழித்த பாபிலோனியரின் படையெடுப்புகளை அவருடைய வாழ்க்கையில் கண்டார். யூதாவின் வீழ்ச்சியின் இறுதி வருடங்களில் எரேமியா தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டியதாக இருந்ததால், அவருடைய புத்தகம் சோகமும், அழிவின் அடையாளங்களும் நிறைந்தவையாக காணப்படுகிறது.

அந்நாட்களில் மனாசே என்கிற கொடிய ராஜா ஆண்டுகொண்டிருந்தான். நல்ல ராஜாவாகிய யோசியா ஆண்ட 13 ஆம் வருஷத்தில் எரேமியா தனது தீர்க்கதரிசன ஊழியத்தை தொடங்கினார். புலம்பும் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படும் எரேமியா, கடினமான செய்தியை அறிவிப்பவனாக இருந்தாலும், உணர்வுமிக்க நொறுங்கிய இருதயம் கொண்ட மனிதர் என்பதை இந்த தீர்க்கதரிசனம் புத்தகம் வெளிப்படுத்துகிறது.

அவனுடைய இளகிய ஆவியானது தேவனின் தீர்க்கதரிசன வார்த்தையை, அவனது குடும்பமும், நண்பர்களும், ஆசாரியர்களும், ராஜாக்களும், யூத மக்கள் அனைவரும் புறக்கணித்ததை உணர்ந்ததால்



அவனது வேதனையை இன்னும் அதிகப்படுத்தியது. தன் ஜீவியம் முழுவதும் தனித்துவிடப்படும், புறக்கணிக்கப்பட்டும் இருந்ததால் எல்லா தீர்க்கதரிசிகளையும் விட தைரியமிக்கவனாக இருந்தார். எதிர்ப்பின் மத்தியிலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சமீபமாக இருக்கிறது என்று மக்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும்படியான தனது தீர்க்கதரிசன அழைப்பை உண்மையாக நிறைவேற்றினார். எரேமியா தேவ செய்தியை பயமின்றி எடுத்துரைக்கும் தன்மை, சோர்வு இல்லாமல் தன் ஜனத்திற்காக பரிந்து பேசும் ஜெபம் ஆகியவைகள் யூத குலத்தின் சரித்திரத்தில் எங்கும் காணமுடியாது.

ஆகவே, குட்டீஸ்! இந்த எரேமியாவைப்போல நாமும் தேவனுடைய வார்த்தையை உண்மையாக படித்து, எல்லாருக்காகவும் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணவும், சபையில் பிரசங்கிக்கப்படுகிற தேவசெய்தியையும், வேதபாடத்தையும் கேட்டு, கர்த்தருக்குள் எல்லாருக்கும் கீழ்ப்படிந்து நடக்கவும், தேவனை நேசிக்கவும் பயிற்சி செய்வீர்களா? குட்டீஸ். அடுத்த இதழில் சந்திப்போம்.

**மனப்பாட வசனம் : மத்தேயு 4:17** "அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்."

**– சகோ. ஜான் செல்லையா**

## டிசம்பர் மாத கேள்விகள்

(**யோவான்** புத்தகத்தில் இருந்து)

1. தேவன் யாருக்கு செவிகொடுக்கிறதில்லை?
2. யார் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை?
3. எருசலேமுக்கு சமீபமாய் ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்தில் உள்ள ஊர் எது?
4. நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்தவள் யார்?
5. யார் புறம்பாக தள்ளப்படுவான்?
6. பிசாசானவன் யாருடைய இருதயத்தை தூண்டினான்?
7. "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்று இயேசு யாரிடம் கூறினார்?
8. இயேசு ஆவியிலே கலங்கி சொன்னது என்ன?
9. "நீ செய்கிறதைச் சீக்கிரமாய் செய்" - யார் யாரிடம் கூறியது?
10. பிதாவின் வீட்டில் எவைகள் உள்ளன என்று இயேசு கூறினார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-01-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. யோவான் 3:30
2. யோவான் 4:8
3. யோவான் 4:22
4. யோவான் 5:28
5. யோவான் 5:39
6. யோவான் 6:29
7. யோவான் 6:63
8. யோவான் 8:56
9. யோவான் 8:44
10. யோவான் 8:58

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | J.V. சுந்தரபாய் வில்லியம் | - சேலம் |
| 2) | S. ஷீபா ஞானவின்சா | - டோனாவூர் |
| 3) | D. சந்திரன் மோசஸ் | - பெங்களூர் |
| 4) | N. ஜான் செல்லையா | - மதுரை |
| 5) | J. ஜெயராணி ஜான் | - மதுரை |
| 6) | S. கார்த்திக் | - கரூர் |
| 7) | M. ராஜா | - கரூர் |
| 8) | M. ஈஸ்வரி | - கரூர் |
| 9) | G. ஏஞ்சலம்மாள் | - மதுரை |
| 10) | Mrs.P. சமாதானம் பீட்டர் | - விருதுநகர் |
| 11) | P. ரேச்சல் ஜானிமா | - நெல்லை |
| 12) | S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 13) | S.G. சேகர் | - ராணிபேட்டை |
| 14) | D. இவாஞ்சலின் ஜோன்ஸ் | - சேலம் |
| 15) | Mrs. காந்தா மனோகரன் | - திருச்சி |
| 16) | Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் | - நெல்லை |
| 17) | Mrs. பட்ரிசியா டேவிட் | - சேலம் |
| 18) | P. ரேச்சல் ஜானிமா | - மதுரை |
| 19) | Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் | - தூத்துக்குடி |
| 20) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | - மதுரை |
| 21) | Y. ஜெயசுதா பொன்செல்வி | - சென்னை |
| 22) | Mrs.A. இமல்டா சுந்தர்சிங் | - ஈரோடு |
| 23) | Mrs. தேவி ராஜாசிங் | - தூத்துக்குடி |
| 24) | S.S. ஞானவின்சா ஸ்பர்ஜன் | - டோனாவூர் |
| 25) | Mrs. ஹெப்ஸி தாமஸ் | - படப்பை |
| 26) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுவை |
| 27) | Mrs. சாந்தி ஜோயல் | - திருச்சி |
| 28) | P.S. ருக்மணி | - கோபி |
| 29) | Mrs.C. வள்ளி | - கரூர் |
| 30) | Mrs. இந்திரா பாண்டி | - மதுரை |
| 31) | Mrs. ரெக்ஸிலின் டெல்பினா | - தூத்துக்குடி |
| 32) | Mrs. மேரி ராஜ் | - மதுரை |
| 33) | Mrs. ஹெலன் திலக் | - தூத்துக்குடி |
| 34) | Mrs. தெல்மா ஸ்டான்லி | - மதுரை |
| 35) | A. கார்பஸ் பிலேமோன் | - மதுரை |
| 36) | C. வைலட் கிறிஸ்டோபர் | - தளவாய்புரம் |
| 37) | J. ஜான்சி | - ஆனைமலை |
| 38) | A. ரோஸ்மேரி | - சென்னை |
| 39) | Mrs. பெரில் பாஸ்கர் | - படப்பை |
| 40) | Mrs. சாந்தி வில்லியம் | - புதுக்கோட்டை |
| 41) | Mrs.D. குளோரி திலகவதி | - சென்னை |
| 42) | Mrs. சூரிய பிரியா | - மதுரை |
| 43) | G. பார்த்திபன் | - வேலூர் |
| 44) | M.S. ஜேம்ஸ் | - திண்டுக்கல் |
| 45) | Mrs.R. சரோஜா | - தென்கலம் |
| 46) | A. லலிதா | - புதுக்கோட்டை |
| 47) | A. டேவிட் ஜெயசந்திரன் | - மதுரை |
| 48) | Mrs. ராணி குமரன் | - கரூர் |
| 49) | S. பாக்கியராஜம் | - மதுரை |
| 50) | Mrs.P. உமாராணி | - சித்தோடு |
| 51) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுவை |
| 52) | R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 53) | Mrs. குளோரி பால்ராஜ் | - தஞ்சாவூர் |
| 54) | D.I.அன்பு சுதந்திரம் | - நெல்லை |
| 55) | S. டேவிட் சாந்தகுமார் | - வல்லம் |
| 56) | J.K. ஜாய்ஸ் ஷகிலா | - நாகலாபுரம் |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **Arasaradi, Madurai**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at Classic Printers & Binders Madurai-2 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th December 2024
Posted at Arasaradi HPO on 10th & 11th December 2024

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers